Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

**"கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"**

## GOAL 2013-2014

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Nov. 13 : 732 Nos.
  - Up to Oct. 13 : 726 Nos.
- **Performance Nov. 13 …**
  - Turnover growth : 0.8 %
  - Employment growth : 0 %
  - 100% Attendance :14.37%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

## OUR FORMULATIONS

- Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments
- Aquafil – Water Disinfection Equipments.
- Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks
- HydroGen Go Green – HHO Generators
- Titanictrade (We deliver value chain) – Portal for Exotic Metals
- – Tiaano Vidyashrm (CBSE Pattern School)

## ACHIEVEMENT




# INVITATION

We, Tiaano congratulate our family children, who are all attained more than 80% scored in 10th and 12th during academic year 2012-13. To cheer them, Company will give a cash award on 1st January 2014 at 11.30 am. Parents are cordially invited along with their Kids at Tiaano Campus, Chennai – 126 for the celebration.

10th standard award winners on 2012-2013

| Serial Number | Students Name | Employees Name | Mark Scored | Percentage |
|---|---|---|---|---|
| 1 | Master. Ruben Jeyakumar. S | **Mr. SounderSuresh. C**<br>Mrs. Vimala. S | 478 | 96% |
| 2 | Miss.Kirubavathi .S | **Mr. Sekar. E**<br>Mrs. Kasthuri. S | 468 | 94% |
| 3 | Miss. Nivetha. B | **Mr.Balasubramanian. K.G**<br>Mrs. Padmavathy.B | 463 | 93% |
| 4 | Master. Gopi. G | **Mr. Gnanasekar. G**<br>Mrs. Santhi. G | 437 | 87% |
| 5 | Miss. Nivetha Jenifer.J | Mr. Jesudhas. T<br>**Mrs. Jayalatha. T** | 436 | 87% |
| 6 | Master. Parthasarathy. R | **Mr. Raveendran. T**<br>Mrs. Ponnarasi. R | 428 | 86% |

12th standard award winners on 2012-2013

| Serial Number | Student Name | Employee Name | Mark Scored | Percentage |
|---|---|---|---|---|
| 1 | Miss. Sujitha Jenifer. J | Mr. Jesudhas. T<br>**Mrs. Jayalatha.T** | 1046 | 87% |

## அழாதே அம்மா

ஓலையாம் என்ற கிராமத்தில் ஒரு விதவைப்பெண் இருந்தாள். அவளுக்கு ஒரே ஒரு மகன் இருந்தான். அவன் மீது அவள் அளவு கடந்த அன்பு செலுத்தினாள். அதனால் அவனை மிகவும் செல்லமாக வளர்த்தாள். பள்ளிக்கூடத்திற்கு அனுப்பவில்லை. பள்ளிக்கூடத்தில் மகன் கஷ்டப்பட நேருமே என்று அவள் கவலைப்பட்டாள்.

கேட்போரும், மேய்போரும் இல்லாத காரணத்தால் அந்த சிறுவன் கெட்ட சிறுவர்களோடு சேர்ந்து கெட்டவனாக மாறினான். தன் தீய நண்பர்களுடன் சேர்ந்து கொண்டு சின்னஞ்சிறு திருட்டுகள் எல்லாம் செய்தான்.

ஒருநாள் அவள் தையற்கடையிலிருந்து ஓர் ஊசியை திருடிக்கொண்டு வந்து தாயிடம் கொடுத்தான். தையற்கடையில் அதை திருடியதைப் பற்றியும் கூறினான்.

Contd…2

## FUNCTIONAL WISHES







| NEW YEAR | PONGAL | REPUBLIC DAY |
| --- | --- | --- |
| 1st JANUARY | 14 th JANUARY | 26 th JANUARY |

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

Banking : M/s. UCO Bank
Auditing : M/s. Nisar & Kumar
AQ Auditing : M/s. Juran Quality
Legal Advisers : Lr. M.K. Govindan
: Lr. V. Benedict Vincent
Tech. Consultant: Dr.G.S. Viswanath
Central Excise : Mr. R. Raghavan
Health Care : M/s. Bethesda Hospital
Tel:22294565

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!

**Mr. G. RAVINDRAN** **06th Jan.**
Fib Tec



**Mr. M. SATHISH KUMAR** **08th Jan.**
Production

**Mr. C. SIVA KUMAR** **10th Jan.**
Production

**Mr. R. MANIKANDAN** **14th Jan.**
Coating

**Mrs. S. SASIREKHA** **19th Jan.**
Marketing

**Mrs. S. YAGAVALLI** **20th Jan.**
Administration

**Mr. M. NAGARAJAN** **20th Jan.**
Production

**Mr. G. MURUGESAN** **21st Jan.**
Purchase

**Mr. P. SEENIVASAN** **23rd Jan.**
Administration

**Mrs. J. VANAJAMBIKA JEYAKUMAR** **27th Jan.**
Director - Technical

**Mr. A. NAZIR KHAN** **30th Jan.**
Administration

**Best Wishes from Tiaano Employees**

மகன் செய்த அந்த திருட்டைப்பற்றி தாய் குறையாக எண்ணவில்லை. தன் மகன் ஏதோ பெரிய சாதனையொன்றைச் செய்துவிட்டதாக எண்ணி மகிழ்ச்சியோடு அந்த திருட்டு ஊசியை வாங்கிக்கொண்டான்.

அடுத்த நாள் யார் வீட்டிலிருந்தோ ஒரு சிறிய பாத்திரத்தைத் திருடிக்கொண்டு வந்தான் மகன். விதவைத்தாயும் அதை பெருமையோடு வாங்கிக்கொண்டாள். மகனுடைய திருட்டு தொடர்ந்தது. சிறுசிறு பொருட்களை திருடிக்கொண்டு வந்த மகன் வாலிபன் ஆனதும் பெரிய பெரிய கொள்ளைகளைச் செய்ய ஆரம்பித்து விட்டான்.

ஒருநாள் இரவு ஒரு செல்வந்தர் வீட்டில் அவன் திருடிய சமயம் வீட்டுக் காவல்காரன் பார்த்துவிட்டான். வாலிபனை அவன் தடுத்தான். ஆனால் வாலிபனோ, அவனை அடித்துக்கொண்டு விட்டு தப்பி ஓடிவிட்டான்.

மறுநாள் போலீஸ்காரகள் வாலிபன் வீட்டிற்கு வந்து அவன் கொள்ளை அடித்ததாகவும், கொலைசெய்ததாகவும் கூறி கைது செய்து கைகளில் விலங்கு மாட்டி இழுத்துச் சென்றனர்.

அந்தக் காட்சியை கண்ட அவன் அன்னை வாயிலும் வயிற்றிலும் அடித்துக் கொண்டு கதறி அழுதாள். அப்பொழுது போலீசாரால் இழுத்துச்செல்லப்பட்ட மகன் தன் அன்னையை நோக்கி, ''அம்மா இப்போது நீ கதறி அழுது என்ன பயன்? நான் ஒரு ஊசியைத் திருடிக்கொண்டு வந்து கொடுத்த போது என்னை நீ கண்டித்து திருத்தியிருந்தால் இந்த அளவுக்குக் கொள்ளைக்காரனாகவும் கொலைகாரனாகவும் ஆகியிருக்கமாட்டேன். இனி நீ வருத்தப்பட்டு ஒரு ஒரு பயனும் இல்லை'' என்று கூறிவிட்டுப் போலீசாரை பின்பற்றிச் சென்றான்.

பிரியமானவர்களே! சின்னஞ்சிறு வயதிலிருந்தே குழந்தைகளை கடவுளுக்கு பயந்து நடக்கிறவர்களாக வளர்க்க வேண்டும். நல்ல பழக்க வழக்கங்களை அவர்களுக்கு சொல்லி கொடுக்க வேண்டும். சிறிய வயதில் அவர்களை எப்படி வளர்க்கிறோமோ அப்படித்தான் அவர்கள் பிற்காலத்தில் வாழ்கை நடத்துவர்.

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

### கான்ஃபிடன்ஸ் கார்னர்

அமெரிக்கப் பள்ளி ஒன்றில், மூன்றாம் வகுப்பு மாணவர்களிடம், அவர்கள் புரிந்துகொண்ட கடவுளைப் பற்றி எழுதச் சொன்னார்கள்.எட்டு வயதான டேனி டட்டன் என்ற குழந்தை என்ன எழுதியது தெரியுமா?

"கடவுள் பெரியவர்களைப் படைப்பதில்லை குழந்தைகளைத்தான் படைக்கிறார். சின்னச் சின்ன அங்கங்களை உருவாக்குவது அவருக்கு எளிதாக இருக்குமில்லையா? அதற்காக! ஆனால் குழந்தைகளுக்கு நடக்கவும் பேசவும் கற்றுத்தர கடவுளுக்கு நேரமில்லை அதனால் அம்மா அப்பாவிடம் குழந்தைகளை விட்டுவிட்டார்.

அம்மா அப்பாவால் நம்முடன் எல்லா இடங்களுக்கும் வரமுடியாது. ஆனால், கடவுளால் நம் கூடவே வரமுடியும். அதனால், யாராவது கடவுளை நம்பாவிட்டால் அவர்கள் எல்லா இடங்களுக்கும் தனியாகவே போக வேண்டியதுதான்!

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## தெரிந்து கொள்வோம்

### சீரகம்

அகத்தைச் சீர் செய்வதால் இதன் பெயர் சீரகம் என்றாகிறது. வறட்டு இருமல் உள்ளவர்கள் மருந்து மாத்திரைகள் சாப்பிட்டு பயனின்றி தவிப்பதை விட சீரக நீரைப் பருகிவர பயன் கிட்டும். புகைப் பழக்கத்தினால் ஏற்படும் இருமலை சீரகம் கட்டுப்படுத்துகின்றது.

அதிக வேலைப் பழு, காரணமாய் நேரம் தவறி சாப்பிடுவோர் அதிகமாய் விருந்துணவு சாப்பிட்டவர்கள் உணவில் சீரகத்தை அதிகமாய் சேர்த்துக் கொள்வது பயன் தரும்.

சீரகத்தினால் வயிறு குளிர்ச்சி அடையும், தாகம் தணியும், "எனவே சர்க்கரை சத்து நோய் உள்ளவர்கள் தங்களின் தணியாத தாகத்திற்கு சீரகத்தை நாடலாம்.

முளை விட்ட சீரகத்தை உலர வைத்துதான் தூள் செய்து சமையலில் பயன்படுத்தி வந்தால் இரத்தக் கொதிப்பு மட்டப்படும்.

Compiled By : Mrs. C. Bhavani
Administration

| Perfect weight | | | |
|---|---|---|---|
| Gents | | Ladies | |
| Height (CMs) | Weight (KILOs) | Height (CMs) | Weight (KILOs) |
| 155 | 53-58 | 142 | 43-48 |
| 157 | 55-61 | 145 | 44-50 |
| 160 | 56-62 | 147 | 46-51 |
| 162 | 57-63 | 150 | 47-52 |
| 165 | 58-65 | 152 | 48-54 |
| 167 | 61-66 | 155 | 50-55 |
| 170 | 62-69 | 157 | 51-57 |
| 172 | 64-71 | 160 | 52-58 |
| 175 | 66-72 | 162 | 54-61 |
| 177 | 68-75 | 165 | 56-63 |
| 180 | 70-77 | 167 | 58-65 |
| 183 | 71-79 | 170 | 60-66 |
| 185 | 73-81 | 172 | 62-68 |
| 188 | 76-79 | 175 | 63-70 |
| 190 | 78-86 | 177 | 65-72 |

Compiled By : Mr. Velappan Jeyakummar
Managing Director

## வாழ்க்கை

மன்னர் காலத்தில், இளைஞர்களுக்கு பொழுதுபோக்கே காட்டிற்கு மிருகங்களை வேட்டையாடச் செல்வதுதான். காடு என்பது பயங்கரமான பிரதேசம். எந்தப் புதரிலிருந்து எந்த காட்டு மிருகம் பாயுமோ... எதுவுமே தெரியாது. காட்டுக்குள் வேட்டையாடப் போவது திகிலான விஷயம் என்றாலும், ஏன் வேட்டையாடப் போகிறார்கள்?

எதிர்பாராத விஷயங்களை எதிர்கொள்வதில் மனிதனுக்கு எப்போதுமே ஓர் அலாதியான இன்பம். ஒரு மன்னர் தன் ஆட்களை அனுப்பி ஒரு புலியையோ, சிங்கத்தையோ பிடித்து வந்து மரத்தில் கட்டி, அதை அம்பு எய்து கொல்ல முடியும். ஆனால், அதில் என்ன பெரிய சந்தோஷமோ, உற்சாகமோ இருக்கிறது? எதிர்பாராத நேரத்தில், எதிர்பாராத திசையில் இருந்து வரும் தாக்குதல்களை எதிர்கொண்டு வெற்றி பெறுவதில்தானே முழுமையான திருப்தி இருக்கிறது.

அப்படி பார்த்தால், நம் வாழ்க்கையும் ஒரு மாய வேட்டைதான். எதிர்பாராத நபர்களிடமிருந்து, எதிர்பாராக நேரத்தில் சோதனைகள், நெருக்கடிகள் வரும். தாக்குதல்கள் வரும். அதை எதிர்கொள்வதில் தான் சந்தோஷம் இருக்கிறது. "என் ஆருயிர் நண்பன் இப்படி என்னை ஏமாற்றுவான் என்று நினைக்கவில்லையே! செழிப்பாக ஓடும் என்று நினைத்துத் தொடங்கிய வியாபாரம் இப்படி ஒரேயடியாகப் படுத்துவிட்டதே!" என்று வருத்தப்படுவதில் என்ன அர்த்தம் இருக்கிறது.

வேட்டைக்குப் போகும் யாரும், "இந்த புலி நான் ஏமாந்த நேரத்தில் என் மீது பாய்ந்துவிட்டது, என்று கூறியதுண்டா? வாழ்க்கையை ஒரு வேட்டையாக நினைத்துக்கொள்ளுங்கள். போராட்ட உத்வேகமும், புதிய உற்சாகமும் கிடைக்கும்.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி XXV)

### ஐந்து குள்ளர்கள்

சிறிது தூரம் நடந்து சென்றுதான், இவற்றை எடுக்க வேண்டியிருக்கும். இப்படி வாரம் ஒரு முறை அல்லது மாதம் ஒரு முறை சில மீட்டர்கள் நடந்தால் தான் இளைத்துப் போய்விட மாட்டோம்.

மூன்றாம் வகைப் பொருள்களை, என்ன செய்வது என்று நீங்கள் தான் தீர்மானிக்க வேண்டும். முதல் இருவகை பொருள்களுக்குத்தான் நமது பணியிடத்தில் அல்லது வீட்டில் முன்னுரிமை. அவற்றை பொருத்தமான இடங்களில் வைத்த பிறகு மீதமிருக்கிற இடம் தான் மூன்றாம் வகை பொருள்களுக்கு, அமெரிக்காவில் 'ஈபே'(e Bay)என்ற ஒரு புகழ் பெற்ற இணையத்தளம் உண்டு. இப்போது இந்தியாவுக்கு வந்துவிட்டது (http://www.ebay.in) ஆனால், இன்னும் இங்கே அதிக பிரபலமாக வில்லை.

இந்த 'ஈபே'யில் என்ன வசதி என்றால், யார் வேண்டுமானாலும், எதை வேண்டுமானாலும் விற்கலாம். ஏலத்துக்கு விடலாம். உதாரணமாக, உங்கள் வீட்டில் ஒரு பழைய சைக்கிள் இருக்கிறது. இப்போது பைக் வாங்கி விட்டதால், சமீப காலமாக நீங்கள் அந்தச் சைக்கிளை பயன்படுத்துவதே இல்லை

Contd…4

## கவிதைகள்

### அம்மா

நம்.....
உள்ளத்தின் .. உள்ளே வாழும் ஓர்
உன்னதமான தெய்வம் ..
நம் அம்மா.........

### நட்பு

துன்பம் நேர்கையில்
தோள் கொடுப்பது நட்பு
உடன் பிறப்பாய் எண்ணி
அன்பு காட்டுவது நட்பு
தடை விதிப்போரையும்
தட்டிக் கழிப்பது நட்பு
மனஸ்தாபம் ஏற்பட்டாலும்
மனம் விட்டு பேசுவதே நட்பு!!

Compiled By : Mrs. M. Sudha
Fib Tec

### சூரியன்

இருள் தின்னும்
ஒளிப் பறவை.
விடுப்பு எடுக்காத
தொழிலாளி.
வெளிச்சத்தின்
மூல பிதா.
ஊலகம் சுற்றும் வாலிபன்.

Compiled By : Mrs. C. Thanga priya
Purchase

## சிந்தனைக்கு

சாதனை படைக்க முற்பட்டால் வேதனைகளைத் தாங்கும் மனோபலமும், தைரியமும் கட்டாயம் தேவை.

### உத்வேகமளிக்கும் மந்திரம்

சாதாரண திறமைகள் இருந்தாலும், அசாதாரண விடாமுயற்சி இருக்குமானால் விரும்பும் அனைத்தும் சாத்தியமாகும்.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

**பணியாளர்கள் மற்றும்** பணியாளர்களின
குடும்பத்தாரிடமிருந்து **கவிதைகள்,**
**கட்டுரைகள்,கதைகள் வரவேற்கப்படுகிற**
**– Editor**

இது போன்ற 'அவ்வளவாக பயன்படாத' , அதாவது மூன்றாம் வகையைச் சேர்ந்த பொருள்களை, நம் வீட்டில் ஓர் ஓரமாக போட்டு வைப்பது தான் வழக்கம். அதுபாட்டுக்கு வீணாக இடத்தை அடைத்துக் கொண்டு கிடக்கும்.

இதற்கு பதிலாக நாம் அந்த சைக்கிளை 'ஈபே' யில் அல்லது அதே போன்ற வேறொரு இணைய, நேரடித் தளத்தில் பகிரங்க ஏலத்துக்கு விடலாம்.

ஒரு புது சைக்கிளின் விலை ஆயிரம் ரூபாய் என்று வைத்துக் கொள்வோம். நம்முடைய ஏலம் ஐநூறு ரூபாயில் தொடங்குகிறது. ஆகவே ஆயிரம் ரூபாய் கொடுத்து சைக்கிள் வாங்க முடியாத ஒருவர், பாதி விலைக்கு உங்கள் சைக்கிளை ஏலம் கேட்டு வாங்கிக் கொள்ளலாம்.

இதுபோல், ரிப்பேர் செய்யவேண்டிய பொருள்களைக்கூட, குறைந்த விலைக்கு ஏலம் விடுவார்கள். வாங்குபவர்கள் அவற்றைச்சரிசெய்து பயன்படுத்திக் கொள்ளவேண்டும்.

'செய்ரி 'யை செயல்படுத்துகிறவர்களுக்குக் குப்பைத் தொட்டி மட்டுமல்ல, 'ஈபே' போன்ற 'பழம்பொருள் அங்காடி'களும் சிறந்த நண்பர்களாக உதவுகின்றன. நமக்கு பயன்படாத ஒரு பொருளை, சும்மா ஒரு மூலையில் போட்டு இடத்தை அடைக்காமல், பயன்படுத்துகிறவர்களுக்குக் கொடுத்து, கொஞ்சம் பணமும் சம்பாதிக்க முடியும்.

இப்போது ஏதோ ஒரு வழியில், மூன்றாம் வகையைச்சேர்ந்த பொருள்களையெல்லாம்,'டிஸ்போஸ்' செய்துவிடுவது அல்லது கண்ணுக்குத் தென்படாத, அநாவசியமாக இடத்தை நிரப்பித் தொல்லைப்படுத்தாத ஒரு பரண்மீது தூக்கி போட்டு விடுவது நல்லது. அப்போது தான் முதல் இரு வகைப் பொருள்களுக்கு இடம் மிச்சம். சரி, இப்படியெல்லாம் இடத்தைச் சேமித்து, பொருள்களைக் கழித்துக் கட்டுவதால் என்ன பிரயோஜனம்?

முதலாவதாக தேவையற்ற பொருள்கள் நீக்கப்பட்டுவிட்டதால் நிஜமாகவே நமது வேலைக்கு அவசியமான பொருள்கள், கருவிகள், பளிச்சென்று கண்ணில் படும் அநாவசியமாக அவற்றைத் தேடி நேரத்தை வீணடிக்க வேண்டியதில்லை.

தொடரும்...

## CRECHE - ADMISSION OPEN FROM JANUARY ONWARDS

